உ

சிவமயம்.

குமரன்.

கற்றதனா லாயபயனென்கொல் வாலறிவ
னற்றாள் தொழாஅ ரெனின். (திருவள்ளுவர்.)

சதங்கை க. | காரைக்குடி துந்துபிஸு ஆனிமீ | மணி உ.

வணக்கம்.

விநாயகர்.

வானுலகு மண்ணுலகும் வாழமறை வாழப்
பான்மைதரு செய்யதமிழ் பார்மிசை விளங்க
ஞானமத வைந்துகர மூன்றுவிழி நால்வா
யானைமுக னைப்பரவி அஞ்சலிசெய் கிற்பாம்

—உமாபதிசிவாச்சாரியார்.

உமாதேவியார்.

காரொழுகுங் குழலாளைக் கருணைவழிந்
தொழுகுமிரு கடைக்கண் ணாளை
மூரலிள நிலவொழுகப் புழுகொழுக
அழகொழுகு முகத்தி னாளை
வாரொழுகுந் தனத்தாளை வடிவொழுகித்
தெரியாத மருங்கு லாளைச்
சீரொழுகும் பதத்தாளை அருணையுண்ணா
முலையாளைச் சிந்தை சேர்ப்பாம்.

—சைவ எல்லப்ப நாவலர்

மாணிக்கவாசகர்.

எழுதரு மறைகள் தேறா இறைவனை யெல்லிற் கங்குற்
பொழுதறு காலத் தென்றும் பூசனை விடாது செய்து
தொழுதகை தலைமே லேறத் துளும்புகண் ணீருண் மூழ்கி
அழுதடி யடைந்த வன்ப னடியவற் கடிமை செய்வாம்.

—பரஞ்சோதி முனிவர்

குமரன்.

நாட்டின் நிலைமையும் நமது கடமையும்.

ஒருநாடு சிறந்து நிற்கவேண்டுமோனால் அந்நாட்டிற்குரியமக்கள் சமயாபிமானம் பாஷாபிமானம் தொழிற்பழக்கம் முதலியவற்றில் சிறந்தவர்களாயிருத்தல் வேண்டும். இம்மூன்றில் ஒன்று குறைந்தாலும் நாடு சிறப்புற்றிருக்க முடியாது. உலகிற் பெருமைபெற்று நிற்கிற ஏனைய நாட்டினர் இதுபோழ்து யாது செய்கின்றனர்? "எங்கும் யாருக்கும் எதற்கும் எப்பொழுதும் கட்டுப்படுதல் கூடாது; பிறநாட்டினரை தமக்கு அடங்கி நடக்கும்படி செய்தல் வேண்டும்; உலகத்திலுள்ள யாவரும் தமது பாஷையைப் பயிலுதல்வேண்டும்; யாவரும் தஞ்சமயத்தைக் கைப்பற்றல்வேண்டும்; தமது தொழிலினாலேயே உலகமுற்றும் வாழ்க்கை நடத்தல்வேண்டும்," என்ற நோக்கத்தைக் கொண்டு உபதேசமூலமாகவோ குண்டு மருந்துகள் மூலமாகவோ கூட்டுறவு மூலமாகவோ உண்மையாகவோ வஞ்சகமாகவோ எப்படியாவது பரப்பி வருகின்றனர்.

உலகத்திலே ஒரு சமூகத்தார் வாழ்ந்திருப்பதும் தாழ்ந்து போவதும் அவரவரது சமயாபிமானம் பாஷாபிமானம் தொழில் ஆகிய மூன்றனுள் அடங்கிவிடுமென்ற உண்மையை மேனாட்டார் அறிந்துகொண்டு விட்டனர். அதை லட்சியமாகக் கொண்டே உலகம்புரக்கின்றனர். மேலும் ஏனைய பலமுள்ள நாட்டினர் இரவு பகலாகப் புதிய புதிய வழிகளையும் முறைகளையுங் கண்டுபிடித்துப் பயன்படுத்திக்கொள்வதிலேயே கண்ணுங் கருத்துமாயிருக்கின்றனர். குண்டு மருந்து பீரங்கி முதலிய ஆயுதங்களைக் கண்டுபிடிப்பதிலும், கப்பல் ஆகாய விமானம் முதலிய ஊர்திகளைக்கண்டுபிடிப்பதிலும். புதிய புதிய பிரசாரங்களைச் செய்வதிலும் கைத்தொழில் வியாபாரங்களை எங்கெங்கோ விருக்கிற கோடா

துகோடி மாதிரியான பழக்க வழக்கங்களையுடைய—பல்லாயிரங் குணமுடைய மக்களுக்கு இன்றியமையாததாகச் செய்தளிப்ப திலும் நிபுணத்தன்மை பெற்று வருகின்றனர். இம்மாதிரி உலகத் திலுள்ள கோடிக்கணக்கான கொள்கைகளைக் கொண்டு இயற் கையான வாழ்க்கை வாழ்ந்து கொண்டிருந்த மக்களை இரவல் மக்களாக்கி அத்தனையுஞ் செயற்கைப் பொருளாக அணிவித்து அவையில்லாவிட்டால் வாழமுடியாதென்று கருதும் நிலையில் கொண்டுவரக்கூடியசாமர்த்திய முடையவர்களாக அவர்களிருக்கின் றனர். இப்படியான மக்கள் வாழும் இந்நாளில் நந்தமிழ்நாடெப் படியிருக்கின்றது? கைத்தொழில்கள் யாவும் மறைந்துபோயின. தொழில்வளர்ச்சி மொழிவளர்ச்சி சமயவளர்ச்சி மூன்றிலும் பிற் பட்டு நிற்கின்றது. எங்கு பார்த்தாலும் ஏழைமக்கள் குடிக்கக் கஞ்சியும் உடுக்கத் துணியும் இருக்க வீடுமின்றி வாடிய முகத் தோடு காணப்படுகின்றனர். நமது நாட்டில் ஏற்ற தொழிலின்மை யால் வெளிநாடுகளுக்குச் சென்று அந்நியர் படுத்தும் பாடுகட்கு உட்பட்டு மானம் மரியாதையையுமிழந்து சாண்வயிற்றின் பொருட் டுத் துன்புறுகின்றனர். நமது நாட்டில் எங்கு பார்த்தாலும் ஏழை முகம்! எங்குபார்த்தாலும் வறுமை! எங்கு பார்த்தாலும் கந்தைத் துணி! எங்குபார்த்தாலும் பசி! எங்கு பார்த்தாலும் பிணி! எங்கு பார்த்தாலும் துயரம்! கைத்தொழிலழிக்கப்பட்டுப் போனபடியால் ஜனங்கள் வறுமையில் மூழ்கி நிற்கின்றனர்.

தமிழ்மொழியின் நிலை எப்படியிருக்கின்றது? ஆங்கில மொழி யின்மோகத்திற்சிக்குண்ட சகோதரர்கள் தமிழைப்படிக்கவும் பேச வுங்கூட வெட்கப்படுகின்றனர். ஒரு பாஷை உயரவேண்டுமானால் அதற்குரியவர்களாலன்றி அன்னியரால் உயர்வடைய முடியாது. தமிழிற்பிறந்து தமிழில் வளர்ந்து தமிழிலேயே பயின்ற மக்களே தமிழை யலக்ஷியப்படுத்தும் போது, அந்நியநாட்டார் மதிக்கவில்லை யென்பது ஆச்சரியமல்ல. தமிழ் மொழி யெவ்வளவு வள ருகின்றதோ அவ்வளவுதான் தமிழ்நாடும் வளர்ச்சியடையும். இதுகாலைத் தமிழ்மொழி யிருக்கின்ற நிலையில்தான் தமிழ்நா டிருக்

கின்றது. தமிழ்மொழிக்கு அந்நியர், எவ்வளவு மதிப்புவைத்திருக்கின்றனரோ அவ்வளவுதான் தமிழ்மக்களிடத்திலும் வைத்திருக்கின்றனர். தமிழ்ப்புலவர்கள் "தமிழ் மொழி தொன்மையது; காலங்கடந்தது; இறைவனாலருளப்பெற்றது" என்று பழய பெருமையைக் கிளிப்பிள்ளைப் பாடமாகப் பேசிக்கொண்டிருப்பதில் பெரிய நன்மை விளையப் போவதில்லை. தமிழ்மொழி வளர்ச்சிக்குப் பெருமுயற்சி தமிழ்நாட்டிற் செய்யப்பட வேண்டியிருக்கின்றது. சமயம் வாய்க்கும்போது விரிவாக எழுதுவோம்.

நமது தமிழ்நாட்டு மக்கள் முற்காலத்தில் சமயவழி பற்றியே எக்காரியமும் செய்து வந்தனர். சமயவழி பற்றிச் செய்யப்படும் எந்தக்காரியமும் நேரிய வழியிற் செல்லும். சமயவழி பற்றி ஒழுக்கம் போதிக்கப்பட்டே தமிழ்நாடு சீர்படவேண்டும். தமிழ் நாட்டிலிதுகாலைத் தமிழனாகப் பிறந்திருக்குமொருவன் செய்ய வேண்டுவது யாது? தொழிலுக்கும் பாஷைக்கும் சமயத்திற்குந் தொண்டு புரிந்து இறைவன் திருவடிநீழலை யடைவதேயாகும். இதை லட்சியமாக வைத்தே தமிழர் இதுபோழ்து முயற்சிசெய்தல் வேண்டும். இம்முயற்சியை நேரே செய்வதற்குத் தமிழ்நாடுபக்குவப் பட்டிருக்கவில்லை. நிலந்தயாரிக்க வேண்டிய நிலையிலேயே இதுகாலைத் தமிழ்நாடிருக்கின்றது. முற்காலத் தமிழ்நாட்டில் சைவ மணங் கமழ்ந்தது; தெய்வமணங் கமழ்ந்தது; தமிழ் மணங் கமழ்ந்தது; ஞானவொளி பரந்து விளங்கியது; ஒழுக்கம் சிறந்து நின்றது. தற்போது தமிழ்நாடெப்படியிருக்கின்றது? தமிழ் நாடெங்கணும் சைவமணங் கமழவில்லை. தெய்வமணங் கமழவில்லை; தமிழ் மணங் கமழவில்லை. எண்ணிறந்த கோவில்கள் கோடிக்கணக்கான பொருள் செலவிட்டுக் கட்டப் பட்டிருக்கின்றன; நெறிப்படி தரிசிப்பாரில்லை. சத்திரங்களும் மடங்களுமிருக்கின்றன; அங்கு சோம்பேறிகளும் மூடர்களும் அயோக்கியரும் வாசஞ் செய்கின்றனர். தேவார திருவாசகந் திருவாய்மொழிக ளிருக்கின்றன; உண்மையோடு ஓதுவாரில்லை. சமய பரிபாலன மடங்களிருக்கின்றன; அவை உலகபோகங்களிற் சிக்குற்று மயங்கிக்கிடக்கின்றன. மடாதிபதிகள் இன்பம் விழைந்து

நிற்கின்றனர். சமய நூல் கற்ற பண்டிதர் பலர் தம்முள் ஒருவருக்கொருவர் பூசல் விளைத்துக் கொண்டிருக்கின்றனர். சமய அறிவு தமிழ் நாட்டில் நாளுக்கு நாள் குறைந்து கொண்டே வருகின்றதென்பது மிகையாகாது. சமய நூல்களை உண்மையுணர்ந்து போதிப்பாரும் சமய நூல்களைக் கற்பாரும் அரிதாகி வருகின்றனர். மடங்களிலும் கோவில்களிலும் ஊருணிக் கரைகளிலும் சுயநலமற்ற புராணிகர் தருமோபதேசம் புரிவதைப் பார்க்க முடியவில்லை. தெருக்கள் தோறும் பஜனைக் கோஷ்டிகளைக் காண்பதருமையாகி விட்டது. அதிகாலையில் சிவநாம விஷ்ணு நாம பாராயணஞ் செய்வது காதிற் படவில்லை. தெய்வங்கட்கென்று உயிர்ப்பலி உற்சவங்கள் கொண்டாடப்படுகின்றன. சண்டையும் வியவகாரமும் மலிந்துவிட்டன. வறுமையும் பிணியும் மக்களைப் பிடித்து வாட்டுகின்றன. அடிமைத்தனம் கவலை பொறாமை வஞ்சம் அகங்காரம் டம்பம் முதலிய கழிபட்ட குணங்கள் மலிந்து விட்டன. பரோபகாரம் தருமம் நல்லெண்ணம் முதலிய உயர்குணங்கள் சுயநலத்தில் மறைந்து கிடக்கின்றன. எங்கும் மூடக்கொள்கை. எங்கும் எதற்கும் வழக்கம் வழக்கமென்ற பேச்சு. கல்வியில்லை. அறிவுக்கு மதிப்பில்லை. எதையும் செய்வதற்குத் தமிழனுக்கு வலிமையுண்டு என்ற தன்னம்பிக்கையில்லை. ஒழுக்கமில்லை. எங்குங் கொலை களவு கள் காமம் பொய். பஞ்ச மகா பாதகங்கள் தலை தூக்கி நிற்கின்றன. உயர்ந்த செந்நெற் பயிர் செய்யப் பெறவேண்டிய தமிழர் மனமாகிய வயலில் உபபோகமற்றதும் துன்பந் தருவதுமாய களைகள் முளைத்துக் கிளைத்தெழுகின்றன. இந்தக்களைகளை வெட்டியெறிந்தாலல்லது நல்ல பயிரை யுண்டு பண்ணுதல் முடியாது. மனம் செம்மைப்பட்டாலல்லது செய்கையில் நல்ல பயன் ஏற்படமுடியாது. எந்தக் காலத்தும் அறிஞர், கெட்ட குணங்களை யகற்றவே முதலில் முற்பட்டிருக்கின்றனர். கெட்ட குணங்களை யகற்றி மக்கள்மனதை சாந்தப்படுத்தினாலன்றி நேரிய வழிகளில் காரியங்களைச் செய்தல் முடியாது. ஒழுக்கமும் பரிசுத்தமான எண்ணமும் உண்மையான தைரியமும் உறுதியும் ஒன்றன்பின் ஒன்றாக மக்கள் மனத்தில்

உண்டாகாத வரை தமிழ் நாட்டிற் செய்யப்படும் முயற்சிகள் பயனளிக்கமாட்டா.

எமது சகோதரர் பலர் அரசியல் வழியில் மக்களை ஒற்றுமைப் படுத்தி நாட்டுக்கு நலஞ் செய்யலாமென முயன்றனர். அரசியல் வழியில் தேசநலத்தை நாடிச்செல்லும் போது ஜாதிச்சண்டை சமயச் சண்டைகள் நிகழாதவாறு தடுத்தல் சுலபமென்றெண்ணினர். யார் எதை எந்தவழியில் முயற்சி செய்யினும் சட்டியிலுள்ளதே சட்டுவத்தில் வருவதுபோல மக்கள் மனத்திலுள்ளனவே செய்கையில் விளைகின்றன. மக்கள் மனம் பரிசுத்தமாகாத வரையில் நல்ல முயற்சிகள் பயன்படமாட்டா! மக்கள் மனத்தைப் பண்படுத்துதற்குச் சமயவழியன்றி வேறு வழியில்லை. இதனையுணர்ந்தே மகாத்மா தமது முயற்சிகளைச் சமயவழி பற்றியே நிகழ்த்துகின்றார். அப்பெரியார் சிறிய முயற்சிகளிலும் சமய நெறியைப் பின்பற்றுமாறு உபதேசிப்பதைக் கண்டு நமது நாட்டு நாகரிக அறிவாளிகளும் அன்பர் சிலரும் ஏளனஞ் செய்யவும் முந்தினர். சமயவழியல்லாத வழிகளில் முயலுங் காரியங்கள் நல்ல பயனையளியாவென்பதே மகாத்மா காந்தியடிகளின் முக்கிய நோக்கமாகும். சுவாமி விவேகாநந்தரும் சமய சம்பந்தமற்ற திருத்தப்பாடுகள் துன்பத்தையே யுண்டாக்குமென்று கூறிச் சமயவழியிலேயே யாவும் நடைபெற வேண்டுமென்று போதித்துள்ளார். சுதந்த வீரனான சிவாஜி மகாராஜனும் சமயவழி பற்றியே நின்றார். சீக்கியர்கள் சமயவழிபற்றியே வீரர்களாயினர்.

இதுகாலை தமிழ்நாடு எந்த விஷயத்திலும் தன்னம்பிக்கையற்று ஒற்றுமையற்று சகிப்பற்று ஒன்றையொன்று தின்று ஒடுங்குங் கிருமியைப்போல் தமக்குள் சண்டையிடும் மக்களைப் பெற்று வாடுகிறது. இந்த நிலையில் நின்றும் நாட்டை முன்னுக்குக் கொண்டுவர முயல்வதே தமிழராய நமது கடமையாகும். "எமது நாடு; எமது பாஷை; எமது சமயம்; எமக்கெதிராவார் யாருமில்லை. எதற்கும் அஞ்சோம்; எவ்வளவு துன்பம் நேரினும் உடலைச் சித்திரவதை செய்தாலும் இம்முயற்சியில் நின்றுழைப்போம்" என்ற

என்னமானது, தமிழ்க்குலத்திலுதித்த பாலர்—இளைஞர்—விருத்தர்—மாதர் முதலிய எவர் மனதிலு முண்டாதல் வேண்டும். இந்த எண்ணமானது தமிழ் மக்கள் மனதில் எந்த இடத்தில் மறைந்து கிடக்கிறதோ அதனையறிந்து, வெளிப்பட்டுப் பிரகாசிக்குமாறு செய்யவேண்டியதே நமது கடமையாகும்.

ஸ்ரீ விவேகாநந்தருடன் சம்பாஷணை.

(ஸ்ரீ சுப்பிரமணியசிவம் மொழி பெயர்த்தது.)

(௩௨-ம் பக்கத்தொடர்ச்சி.)

சிஷ்யர்:—அப்படியானால் நமக்கு நிவிர்த்தியே கிடையாதா?

ஸ்வாமிகள்:—நிச்சயமாக உண்டு. இது ஸநாதனதர்ம பூமி. தேசம்விழுந்துகிடக்கின்றது, சந்தேகமில்லை; ஆனால் அது நிச்சயமாய் எழுந்திருக்கும்; அந்த எழுச்சி உலகத்தை ஆச்சர்யப்படச் செய்யும். அலைகள் எவ்வளவு பெரியபொந்துகளை யுண்டாக்குகின்றனவோ, அவ்வளவு உயரமாயும் அவ்வளவு சக்தியுடனும் அவை மறுபடியும் கிளம்பும்.

சிஷ்யர்:—எப்படி (இந்தியா) மறுபடியும் கிளம்பும்?

ஸ்வாமிகள்:—தெரியவில்லையா? கிழக்காகாயத்திலே முன்னமேயே அருணன்தோன்றி விட்டான்; சூர்யோதயத்துக்குக்கொஞ்சம் கூட தாமதம் இல்லை. நீங்களெல்லோரும் சக்கரத்தின் கீழே தோள்களைக் கொடுங்கள்! உலகத்தையே எல்லாமாக வைத்துக் கொள்வதிலும் "எனது சம்சாரம்" "எனது சம்சாரம்" என்று நினைப்பதிலும் யாது உள்ளது? இப்பொழுது நீங்கள் செய்ய வேண்டிய கடமையாவது, தேசத்தின் பல பாகங்களிலும் சென்று கிராமத்துக்கு கிராமம் சென்று, இனிமேல் சோம்பேறிகளா யுட்கார்ந்திருத்தல் தகாதென்று ஜனங்கள் அறிந்துகொள்ளும்படி

செய்யவேண்டும். அவர்கள் தங்கள் உண்மையான நிலைமையை அறிந்துகொள்ளும்படி செய்யுங்கள். "எ சகோதரர்களே, எல்லோரும் எழுந்திருங்கள்! விழித்துக்கொள்ளுங்கள்! எத்தனை நாள் நீங்கள் உறங்கிக்கொண்டிருக்கலாம்?" என்று சொல்லுங்கள். போய் அவர்களுடைய நிலைமையை அபிவிருத்திசெய்துகொள்வதெப்படி என்று அவர்களுக்குப்போதியுங்கள். சாஸ்திரங்களைத்தெளிவாக, அவர்கள் அறிந்துகொள்ளும்படியான மாதிரியில் எடுத்துக்கூறி அவற்றின் அழகிய உண்மைகளை அவர்கள் தெரிந்துகொள்ளும்படி செய்யுங்கள். இத்தனை நாட்களாக பிராஹ்மணர்கள், மதத்தை தங்களுக்குச் சொந்தமாக்கி வைத்துக்கொண்டிருந்தார்கள்; ஆனால், காலத்தினுடைய பலமான அலைக்கு நேரே அவர்கள் எதிர்த்து நிற்கமுடியாது போய்விட்டது; நீங்கள் பூமியிலேயுள்ள எல்லோரும் அந்த மதத்தை யடையும்படியான வழிகளைத் தேடுங்கள்; எல்லோருக்கும், சண்டாளனுக்கும் கூட, இந்த உக்ரமான மந்திரங்களையுபதேசம்பண்ணுங்கள்! இன்னும், வாழ்க்கையின் ஆவச்யகங்களைப்பற்றியும், வியாபாரம், வர்த்தகம், விவசாயம் முதலியவற்றிலும் எளியநடையில் போதனைசெய்யுங்கள்! நீங்கள் இதுசெய்யமுடியாவிட்டால், உங்களுடைய கல்வியும் பயிற்சியுந் தான் என்னே! நீங்கள் வேதங்களையும் வேதாந்தத்தையும் படித்துத் தான் என்னே!

சிஷ்யர்:—ஆனால் நம்மிடத்தில் அந்தபலம் எங்கே யுள்ளது? ஸ்வாமிஜி, தங்கள் சக்திகளில் நூற்றில் ஒரு பங்கேனும் எனக்கிருந்தால், நான் பாக்கியவந்தனுய் விடுவேன்.

ஸ்வாமிகள்:—என்ன மூடத்தனம்! சக்திகளும் மற்றும் தாமே யுண்டாகும். நீ வேலை செய்ய ஆரம்பித்துவிட்டால், நீ தாங்கமுடியாதபடி அவ்வளவு அபாரமான சக்தி உனக்குண்டாவதை நீ காண்பாய். பிறருக்காகச் செய்யப்படும் மிக மிகச் சிறு வேலையும் உள்ளேயுள்ள சக்தியைக் கிளப்பிவிடுகிறது; பிறருக்கு மிக மிகச் சிறிய நன்மையையாவது செய்ய நினைத்தால், அந்த நினைப்புக்கூட மெல்ல மெல்ல மெல்ல ஹிருதயத்தினுள்ளே ஒரு ஸிம்ஹத்தினுடைய பலத்தை யூட்டிவிடுகிறது. நான் உங்கள் எல்

லோர்மீதும் எவ்வளவோ அன்பு செலுத்துகிறேன். ஆனால் நீங்கள் எல்லோரும் பிறருக்காக உழைத்து மரிக்கவிரும்புவேன்,—நீங்கள் அப்படிச் செய்தால் நான் சந்தோஷமடைவேன்!

சிஷ்யர்:—அப்படியானால், என்னைச் சார்ந்திருக்கிறவர்களுடைய கதி என்னவாகும்?

ஸ்வாமிகள்:—நீ பிறருக்காக உனது ஜீவிதத்தை தியாகம் செய்யத்தயாரானால், ஈச்வரன் அவர்களுக்கு நிச்சயமாக ஏதேனும் வழி செய்வார். ஸ்ரீ கிருஷ்ணனது வார்த்தைகளை கீதையிலே நீ படிக்கவில்லையா? "ஏ அன்ப, நன்மைபுரிபவன் ஒரு பொழுதும் துக்கமடைகிறதில்லை."

சிஷ்யர்:—ஆம், ஸ்வாமி.

ஸ்வாமிகள்:—முக்கியமான விஷயம் தியாகமாம்.—தியாகமில்லாவிட்டால், பிறருக்கு உழைப்பதில் எவனும் தனது முழு ஹிருதயத்தையும் அர்ப்பணம் செய்யமுடியாது. தியாகபுருஷன் எல்லோரையும் சமதிருஷ்டியுடன் பார்த்து, எல்லோருக்கும் சேவை செய்வதில் தன்னை யர்ப்பணம் செய்து விடுகிறான். நமது வேதாந்தம் கூட எல்லோரையும் சமதிருஷ்டியுடன் பார்க்கும்படி நமக்குப் போதிக்கவில்லையா?—அப்படியிருக்க, பிறனைப் பார்க்கிலும் மனைவியும் குழந்தைகளும் உனக்குச் சொந்தமென்றுள்ள எண்ணத்தை நீ ஏன் வைத்துக்கொண்டிருக்கிறாய்? உனது வீட்டுவாசலிலேயே, நாராயணனே எளிய பிச்சைக்காரனுருவெடுத்துப் பட்டினியால் மரித்துக்கொண்டிருக்கிறார். அவருக்கு ஏதேனும் கொடுக்காமல், உனது மனைவியினுடையவும் குழந்தைகளினுடையவும் பசியை மாத்திரம் ருசிகரமான பதார்த்தங்களால் திருப்தி செய்வாயா? ஏன், அது மிருகத்தனம்!

சிஷ்யர்:—பிறருக்காக உழைப்பதென்றால் சில சமயங்களிலே ஏராளமாகப்பணம் வேண்டியிருக்கின்றது, எனக்கேது பணம்?

ஸ்வாமிகள்:—உனது சக்திக்கியன்றவளவு ஏன் செய்யக்கூடாது? பணமில்லாமையால் நீ பிறருக்குக் கொடுக்க முடியாவிட்

டாலும் கூட அவர்களுடைய செவிகளிலே சில நல்ல வார்த்தை களை யேனும் நீ நிச்சயமாகக் கூற முடியும். அல்லது சில நற்போ தனைகள் செய்யமுடியும். உன்னால் இது முடியாதா? அல்லது அதற்கும் பணம் வேண்டுமோ?

சிஷ்யர்:—ஆம், ஸ்வாமி; அது என்னால் செய்யமுடியும்.

ஸ்வாமிகள்—"என்னால் முடியும்" என்று சொன்னால் மாத் திரம் போதாது. உன்னால் இன்னது செய்யமுடியு மென்பதை நீ செய்கையினால் எனக்குக் காண்பிக்கவேண்டும்; அப்பொழுது தான் நீ என்னிடம் வந்ததினால் நற்பயன் உண்டாயதென்று அறிந்துகொள்வேன். எழுந்திரு, சக்கரத்தின்கீழ் உனது புஜத் தைக்கொடு,—இந்த ஜீவிதம் எத்தனை நாள் நீடித்திருக்கும்? நீ இவ்வுலகினுள் வந்திருக்கிறாயாகையினால், பின்னே ஏதேனும் அடையாளம் வைத்துவிட்டுப்போ. இல்லையேல், உனக்கும் மரங் களுக்கும் கற்களுக்கும் வித்தியாசமென்ன?—அவையும் பிறந்து பிறந்து, ஜீர்ணித்து, மரிக்கின்றன. நீ பிறந்து அவற்றைப்போல மரிக்கவிரும்பினால், நீ தாராளமாக அப்படியே செய்யலாம். நீ வேதாந்தம் படித்ததினால், அது மிக மிக சிரேஷ்டமான நன்மை யைப் பயந்திருக்கிறது என்பதை உனது செய்கைகளினால் எனக் குக் காண்பிப்பாய். போய், "உங்கள் எல்லோரிடத்தும் அந்த நித்திய சக்தியுள்ளது" என்று எல்லோரிடமும் கூறுவாய். அதை விழிக்கச்செய்ய முயற்சிப்பாய். தனி மோக்ஷத்தை வைத்துக் கொண்டு என்னசெய்வாய்? அதுவெறும்ஸ்வயநலமேயாம். உனது நிஷ்டையை யொருபக்கம் ஒதுக்கிவை. உனது மோக்ஷத்தையும் இதர விஷயங்களையும் ஒருபக்கம் ஒதுக்கிவை! நான் எந்த வேலை யில் என்னை யர்ப்பணம் செய்துகொண்டிருக்கிறேனே, அந்த வே லையில் நீ முழுமனதுடன் இறங்கிவிடு.

(சிஷ்யர் நிச்சலனமாயிருந்து இந்த ஆவேச மொழிகளைக் கேட்டார்; ஸ்வாமிகள் தமது வழக்கமான ஆத்திரத்துடனும் வாசாலகத்துடனும் மேலும்மேலும்சொல்லிக்கொண்டே போனார்.

ஸ்வாமிகள்:—எல்லாவற்றுக்கும் முதலாக நிலத்தைத் தயார் செய்யவேண்டும். தக்ககாலத்திலே மதத்தைப்பற்றிப் பிரசங்கங்கள் புரிவதற்கு ஆயிரக்கணக்கான விவேகாநந்தர்கள் இவ்வுலகில் பிறப்பார்கள். அதைப்பற்றி நீ கவலைப்படவேண்டாம்! நான் என் அநாதாலயம், பஞ்சநிவிர்த்தி வேலைகள் முதலியவற்றை யாரம்பித்துக்கொண்டிருக்கின்றே னென்பது உனக்குத் தெரியவில்லையா? ஆங்கில ஸ்திரீயாகிய நிவேதிதா சகோதரி இந்தியர்களுக்குத் தாழ்ந்த வேலைகள்கூடச் செய்து மிகவும் நேர்த்தியாக ஸேவை செய்வதற்கு எப்படிக்கற்றுக்கொண்டிருக்கிறாளென்பதுவுனக்குத்தெரியவில்லையா? நீங்கள் இந்தியர்களாயிருந்தும், அதுபோல உங்களுடைய தேசத்தாருக்குத் தொண்டுசெய்ய உங்களால் முடியாதா? எங்கெல்லாம் ப்ளேக் அல்லது பஞ்சம் உண்டாகின்றதோ அல்லதுஎங்கெல்லாம், ஜனங்கள் கஷ்டத்திலிருக்கின்றனரோ, அங்கெல்லாம் நீங்களெல்லோரும் சென்று, அவர்களுடைய கஷ்டங்களைக் குறையுங்கள். மிஞ்சினால், நீங்கள் அந்த முயற்சியிலே மரிக்கலாம். ஆனால் தான் என்ன? உன்போல் எத்தனை பேர் தினந்தோறும் புழுக்கள்போற் பிறந்து மரிக்கின்றார்கள்? அதனால் உலகுக்கு என்ன வித்தியாசம் ஏற்படுகிறது? நீ இறக்கத்தான் வேண்டும். ஆனால் இறப்பதற்கு ஒரு பெரிய லக்ஷியத்தை வைத்துக்கொள். ஜீவித்ததில் ஒரு பெரிய லக்ஷியத்தை வைத்துக்கொண்டு மரித்தல் சிரேஷ்டமேயாகும். வீட்டுக்குவீடு இந்த லக்ஷியத்தை போதிப்பாய். உனக்கே நன்மையுண்டாகும். உனது தேசத்துக்கும் நன்மை செய்வாய். நமது தேசத்துப் பிற்கால நம்பிக்கைகள் உங்கள் மீது கிடக்கின்றன. நீ சோம்பர் வாழ்க்கை வாழ்வதைப்பார்க்க நான் மிகுந்த வருத்தமடைகிறேன். வேலை செய்ய ஆரம்பித்துவிடு——வேலையை ஆரம்பித்துவிடு நிற்காதே—மரணகாலம் தினந்தோறும் நெருங்கி வருகின்றது. பின்னால் ஒவ்வொன்றும் காலத்திலேசெய்யப்படுமென்று நினைத்துக்கொண்டு சோம்பேறியாய் உட்கார்ந்திராதே! அம்மாதிரி எதுவும் செய்ய முடியாது——ஞாபகமிருக்கட்டும்.

முல்லைப்பூ.

தன் சரித்திரத்தைத் தானே சொல்லிக் கொள்ளுதல்.

(*Autobiography of a Jasmine.*)

ஸ்ரீமாந் அரு. சோமசுந்தரஞ் செட்டியார் எழுதியது.

செல்வம் பல திகழும் நாட்டுக்கோட்டைச் செட்டிமார் குலதிலகராகிய ஒரு தர்மப்பிரபுவால், ஆயிரக்கணக்காகச் செலவழித்துப் பரிபாலித்துவரப்பெறுகின்ற, திருமணங்கமழும் திருப்பூந்தோட்டத்தில் ஒரு திருமுல்லைச் செடியில், சோமவார தினத்தன்று நான் திருவவதாரஞ் செய்தேன். என்னை நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாகக் கண்ணப்பர் குல திலகராகிய முத்தன் எனும் பத்தன், எனது பகைஞராகிய கரட்டான் ஓந்தி முதலியவைகளை முனிந்து, தண்ணீர் பாய்ச்சிப் பாதுகாக்க வளர்ந்து மங்கள வாரத்தன்று காயரும்பாயினேன். அப்பொழுது என் நிறம் இளம்பாலாகிய சிம்பால் நிறம்போ லிருந்தது. என்வடிவம் சுருங்கிய குடைபோலிருந்தது. எனது அருமை அன்னையாராகிய முல்லைத்தேவி என்னிடத்தில் வைத்திருந்த அன்பையும், என்னை வளர்த்தற்கு அவள் பட்ட கஷ்டத்தையும் என்னென்றுரைப்பேன்! அவள் தன்னுடைய வேரின் வழியே நீரையும் உணவுப் பொருள்களையும் உட்கொண்டு, அவைகளைத் தன்னுடைய இரத்த நாளங்களின் வழியே கொணர்ந்து பாலாக்கிக் கண்திருஷ்டி வராமல் ஒருவரும் பாராவண்ணம் எனது சிறு குழல் வாயின் வழியே அதனை ஊட்டினாள். கடவுள், காற்று வெளிச்சம் உஷ்ணம் எனும் முப்பொருளையுந்தந்து, என்னைக் காப்பாற்றினார். நான், என் தாயின் மடியிலே இடப் பெற்றிருந்த மூன்று இதழ்களாக விளங்கிய பச்சைப் பட்டாடையில் படுத்திருந்தேன். என் நற்றாய், என்மேல் ஈ எறும்பு மொய்க்கா வண்ணம், தன்னுடைய கொடிகளாகிய கரங்களால் எப்பொழுதும் இலைகளாகிய விசிறி கொண்டு

வீசிக்கொண்டிருந்தாள். அத்தகையமாதாவை நான் ஒருநாளும் மறந்ததில்லை. நன்றியில்லா மக்கள் மறந்தாலும் நான் மறக்கமாட்டேன். பின்னர் புதவாரத்தன்று நான் போதாயினேன். அப்பொழுது என்னிறம் பசும்பால் போல் தூய வெள்ளையாயிருந்தது. சாந்த குணத்தின் நிறம் வெண்மையாதலால் அது என்னுடைய குணநலத்தை விளக்கிற்று. இளமையும் அழகும் சொக்கியது. என்னுடைய பிரகாசம், பார்த்தவர் கண்களையெல்லாம் பறித்துக் கொண்டு விட்டது. நான் செல்வத்திற் சிறந்த சீமான் பிள்ளையைப்போல் பருத்துக் கொழுத்துச் சிறந்திருந்தேன். என்னைப் பார்த்தவர்களெல்லோரும் என் முகம் நன்கு அலரும் பருவத்தை எதிர்பார்த்த வண்ணமாகவே யிருந்தார்கள்.

இஃது இவ்வாறாக, அலரும் பருவம் அணுகியதால் நான் அடங்கா மகிழ்ச்சிகொண்டு உடல் பூரிக்கப்பெற்றிருந்தேன். அப்பொழுது, திருவிழாக்களுக்குவரும் வேசிமார்களைப், பலாப்பழத்தில் ஈ மொய்ப்பதுபோல் மொய்த்துக்கொண்டு விழித்தகண் குருடராய்ப் பின்தொடர்ந்து திரியும் மஹான்களைப்போல், பலகாளைகள் என்னைக்கண்டு மயங்கிக் காதல்கொண்டு என்னை வசப்படுத்தும் பொருட்டுத் தங்களால்இயன்றவரை முயற்சிசெய்தார்கள். ஆனால் தோட்டக்காரனோ, செட்டியார்கோபிப்பார்களென்று அவர்களிடத்து என்னை ஒப்புவிக்க மறுத்து விட்டான். ஆயினும் சில கரியமேனிக் காளைவண்டுகள், கள்ளத்தனமாகத் தோட்டக்காரனுக்குத் தெரியாமல் என்னிடத்திலுள்ள தேனைப்பருகுவான் கானஞ்செய்துகொண்டு என்னை அக்கம்பக்கம் போகவிடாமல் வளைந்துகொண்டு சுற்றின. ஆனால் என் அன்னை தன்னுடைய கரங்களால் அவைகளை அடித்துத் துரத்திவிட்டாள்.

பிறகு நான் நல்வழிகருதிக் கடவுளைக்குறித்து ஒற்றைக்காலில் நின்று தவஞ்செய்துகொண்டு கண் வாய் முதலியன திறவா மௌனஞானியாய்க் குருவாரத்தன்று கூப்பிய கரங்களுடன் விண்ணை நோக்கியிருந்தேன். மறுதினம் நான் தோன்றிய இத்தலம்

நாளாகிய சுக்கிரவாரத்தன்று என் தந்தை அவமாக்கிச் சிற்றின்பத்தேனூற, குறுகுறுவென்று என் வயிற்றைக்கொளைத்துக் கிழிந்துக்கொண்டு, என்முகத்தை மலரச்செய்து என் வாயின் வழியாகவந்த அப்பூந்தோட்ட மெல்லாம் நறுமணத்தைப் பரப்பியது. இதனைக்கண்டு கழிபேருவகை கொண்டு காளைவண்டரெலாம், மங்கலமாகப் பக்கலிலுள்ள மல்லிகையை வெண்சங்காக் கொண்டு சங்கநாதஞ்செய்து அந்நாளை ஒரு சாந்தி முகூர்த்த நன்னாளாகக் கொண்டு களிபாட்டயர்ந்தன. இவ்வின்பக்கடலிடையே எளியேன் எல்லையில் உவகை கொண்டு, அத்தோப்பில் வாழ்ந்துகொண்டிருந்த என்னுடைய உறவினர்களோடு இனிது வாழ்ந்துகொண்டிருந்தேன். அன்று மாலை எங்கள் குலக்கொழுந்தாகிய கோட்டூர் முல்லைக்கிழார் "நம்பன் நமக்கு அழகையும வாசனையையுந் தந்து நம்மை இப்பூங்காவனத்தில் இனிது வளரச்செய்தான். இங்கே நாம் பொதுமகள் போல் அல்லற்படுகிறோம். நாளை அதிகாலையில் பண்டாரங்களெல்லாரும் குடலையுங் கம்புங் கையுமாக வருவார்கள். நம்மையெல்லாம் வெவ்வேறாகப் பிரித்துவிடுவார்கள். நாம் யாரிடத்தில் எங்கு போய்ச் சேரப்போகிறோமோ? நாமோ பரம சைவ சமயிகள். நம்மை மச்சமாமிசம் புசிப்போர் கவருவார்களோ? கடைவீதியில் சிரிப்பார்சிரிக்கநாலுபேர்முக்கில் இருக்கப்போகிறோமோ? வேசிவீடுசெல்லும் வீணர்கையில் அகப்படப்போகிறோமோ? சென்றுசென்று செல்வர் தலைவாயிலிலே நின்றுநின்று கன்றப்போகிறோமோ? அல்லது பூர்வபுண்ணிய வசத்தால், 'சிவனெனு நாமந் தனக்கேயுடைய செம்மேனி யெம்மான்' சேவடி சேர்வோமோ என்னவோயாதும் அறிகிலம்" என்று கூறினார்: அன்றிரவு முழுதும் எங்களுக்கு மஹா சிவாத்திரியாகவேயிருந்தது. சத்விஷயங்களைப்பற்றியே பேசிக்கொண்டிருந்தோம்.

மறுநாள் காலையில், அத்தோப்பிற்குப் பூவெடுப்பதற்காக ஞான பண்டாரத்தார் பலர் வந்திருந்தனர். ஊன பண்டாரத்தாரும் பலர் வந்திருந்தனர். அவர்களுள் சிவன்கோவிலுக்குப் பூ எடுப்பதற்காகத்துர்ந்து முஞ்சிக் கைலாசபண்டாரத்தாரும்படுத்த

படுக்கையிலிருந்து எழுந்து கல்லையும் நடைக்காமல், பல்லையுந் துலக்காமல் வந்திருந்தார். அவர் இராப்பகலாக என்னைச் செலவையும் பாராமல் குட்டைப்புராணம் படிப்பவராதலால் சதாகாலமும் தூங்கிவிழுந்துகொண்டேயிருப்பார். அதனால் அவருக்கு அவ்வூராரால் இப்பட்டம் வழங்கப்பெற்றது. அத்தோப்பிற்கு வந்திருந்த பண்டாரங்களெல்லாரும் அவரவர்பாடு தத்தமக்கு வேண்டிய புட்பங்களைக் கொய்துகொண்டு தத்தம் இல்லத்திற்கேகினார்கள். இவரும் வகை வகையாக மலர்களையெல்லாங் கொய்த பின்னர் என்னையணுகி என்னையும் செடியிலிருந்து எடுத்துத் தம்முடைய பூங்கூடையிற் பத்திரமாக வைத்துப் பன்னீர் இலைகளால் மூடினார்; தண்ணீர் தெளித்தார். பின்னர் வீட்டிற்குச்சென்று சுவற்றிலேயுள்ள ஒரு ஆணியில் குடலையைத் தூக்கிவைத்தார். காலையில் நடத்தவேண்டிய ஆன்மார்த்த பூஜையை, ஒரு டஜன் தோசை ஒன்றரைச்சேர் காப்பியுடன் பூர்த்தி செய்துவிட்டுச் செல்லத்தை எடுத்துக்கொண்டு வந்து தெருத்திண்ணையில் அமர்ந்தார். அவர் சுத்த சைவராதலால் சிவக்ஷேத்திரமாகிய சிவபுரியில் விளைந்த புகையிலையைத் தான் அவர் இல்லத்தில் உபயோகப் படுத்துவது வழக்கம். இது இவ்வாறாக, அங்கே புட்கரர் பலர்கூடிச் சீட்டுச் சொற்கேட்டான் போட ஆரம்பித்து, லாப நஷ்டங்களையெல்லாம் பெருக்கிக் கொண்டிருந்தார்கள். அத்திருவிளையாடல்களையெல்லாம், குடலையினுள்ளிருந்து, அதன் துவாரங்களின் வழியாகப் பார்த்துக்கொண்டிருந்த நான், கண்ணுங் கண்ணீருமாய் "ஆஹா! சிவபக்தர்களெல்லாரும் இக்கதிக்கு வந்துவிட்டார்களே" என்று பெரிதும் வருந்திக்கொண்டிருந்தேன். மணியும் பத்தாகிவிட்டது. நான் அழுத கண்ணீர், அக்குடலையிலுள்ள துவாரங்களின்வழியே ஒழுகி, அவர்கள் எழுந்தருளியிருந்த சமுக்காளத்தை நனைத்துவிட்டது. இதை உணர்ந்ததும் கோயிலுக்குப் பூத்தொடுக்கப் போகவேண்டும் என்ற ஞாபகம் ஓதுவார் மூர்த்திகளுக்குப் பிறந்தது. உடனே குடலையை எடுத்து ஒரு கையிலே மாட்டிக்கொண்டார். மற்றொரு கையிலே செல்லத்தைப்

பிடித்துக் கொண்டார். ஓரோட்டமாகக் கோயிலுக்குச் சென்றார். மலைக்கல்லில் குடலையைத் கவிழ்த்தார். மற்றொரு கல்லில் அவரும் உட்கார்ந்து கொண்டார். என்கண்ணீரைத் துடைப்பவர் போல் தண்ணீரை எடுத்து என்முகத்தில் தெளித்தார். பிறகு சிவபெருமானுக்காகத் தொடுத்தமாலையில் என்னையுஞ்சேர்த்து இறுக்கிக் கட்டினார். அவ்வாறு அவர் தொடுக்கும் பொழுது, அவருடைய முழங்காலிலெல்லாம் முட்டுப்பட்டுக் கட்டுப்பட்டு மிகவும் வருந்தினேன். அப்பொழுதுதான் எளியேனுக்குப் பூத்தொடுப்பவர்களின் அனத்தமும் ஊழலும் புலப்பட்டன.

பின்னர், பன்னீர்தெளித்து என்னை மற்றொரு குடலையில் வைத்து விட்டார். அப்பொழுதுநான், புதிதாக நல்லமாப்பிள்ளைகளுக்கு மணம்பேசி வைத்திருந்த திருமணப் பெண்களைப்போல் "சிவபெருமானுடைய திருமேனியிலே நாம் சேரப்போகிறோம். பிறகு சண்டேசுரநாயனாருடைய திருமேனியிலே சேரலாம். சிவகதிபெறலாம்" என்று ஆனந்தவார்கலியுள் ஆழ்ந்திருந்தேன். பிறகு அன்று மாலையில் ஓதுவார் மூர்த்திகள், அத்திருக்கோயிலில் சுவாமிக்குப் பூஜைவைக்கும் ஆபத்தாரணமய்யர் என்ற ஒரு நொண்டிக் குருக்களையாவிடத்தில் என்னைச்சேர்த்தார். அந்தமஹாபாவன் என்னை சுவாமிக்குச் சாத்தாது, சுவற்றிலிருந்த கொண்டியில் தளையிட்டுவைத்தார். "கைக்கெட்டியது வாய்க்கெட்டவில்லையே" என்று எண்ணி எண்ணி வாட்டமுற்றேன். கள்வன் கையில் அகப்பட்ட மணிமாலைபோல் தவித்தேன். பின்னர், "ஐயோ அவர், தஸ்கராயநம: வென்று நம்மைக் கவருவதால், சிவசொத்தைத் திருடிய பாவத்தை யநுபவிக்கப்போகிறாரே! நாம் தானே இதற்குக் காரணமாயிருத்தல் வேண்டும். நாம் இதற்காகவோ பிறந்தோம் என்று வாடினேன்; வருந்தினேன். அவர் அவசரப்பட்ட குருக்களாதலால் வெகுவேகமாக மணியை அடித்துச் சாயரக்ஷையை முடித்துவிட்டு, என்னை ஒரு சிறு குடலையில் வைத்துக் கொண்டு, திருக்கள்ளூருக்குப் போகும் ரெயில் வண்டியில் ஏறிச் சென்றார். ஸ்டேஷனிலிறங்கி, நேரே அவர் தன்னூருக்குத் தன்,

றுப திருப்பூந்துருத்திப் புஷ்பத்தம்மாள் வீட்டிற்குப் போனார். உடனே அவள் வாயிலில் ஓடிவந்து அவரை, அவளுடைய இரு திருக்கரங்களாலும் வரவேற்றாள். பின்னர், "மாலை கொண்டுவந் தீர்களா? இல்லையா? ஏன் இன்று இவ்வளவு தாமதம்? திருப் பூ வனம், பூங்குடி காவிரிப்பூம்பட்டினம், திருப்பூந்துராய் முத லிய இடங்களிலிருந்து பல்வேறு வகைப்பட்ட புட்பங்கள் ஏராள மாகக் கோயிலுக்கு வந்திருக்கின்றனவாமே! அவைகளை யெல்லாம் என்ன செய்தீர்கள்" என்று கோபமாகக் கேட்டாள். அவரோ பரபரத்துக்கொண்டு, "இதோ மாலையுங் கையுமாய் வந்திருக்கின் றேன். தனிப்புத்துருக்கு நெய்யில் உனக்காகச் செய்து சுவாமி க்கு நைவேத்யம செய்த கந்தரப்பங்கள் இதோ இருக்கின்றன. எடுத்துக்கொள்" என்று அவைகளை எடுத்து அவள் கையிற்கொடுத் தார். அப்பொழுது அந்த அம்மாளைப் பார்த்தவுடனேயே எனக் குப் புத்திமருண்டு போய்விட்டது. அவளுக்கு வயசு பதினாறு தானிருக்கும். ஆதலால் அவளுடைய அனிச்சப்பூப் போன்ற கைகளைப் பரிசிக்கும் பேற்றைப் பெற்றதற்கு நான் அகமிக மகிழ்ந் தேன். அவள் என்னைத் தன்னுடைய திருக்கண்ணார் கோயிலி லே வைத்துக்கொண்டாள். திருமூக்கிச் சுரத்தில் வைத்து நுகர் ந்து பார்த்தாள். திருமுடியிலே சூடிக்கொண்டாள். அளவிலாப் பேருவகை கொண்டாள். நானும் அவள் தலையில் ஏறியிருப்பது பற்றி, இறுமாப்புக் கொண்டிருந்தேன. அவள் கந்தரப்பத்தை எடுத்து வயிற்றப்ப தேவருக்கு ஆராதனை செய்தாள். பின்னர் ஜில் என்று ஒரு திருப்புகழ் பாடினார். நான் அதில் ஆழ்ந்துவிட் டேன். குருக்களையாவிற்கும் ஷோக் பிறந்துவிட்டது. ஆதலால் அன்றிரவு முழுதும் எங்களுக்கு ஒருகளியாட்டமாகவே யிருந்தது. நானும் அவ்வின்பத் திளைப்பிற் கலந்துகொள்ளும் பேறு பெற் றேன். அவரும் புஷ்பத்தோடு கட்டிப்புரண்டார். நானும் புஷ் பத்தோடு கட்டிப்புரண்டேன். அவளும் புஷ்பத்தோடு கட்டிப் புரண்டாள். ஆக எல்லாம் புஷ்பமயமாக இருந்தது.

மறுநாள் காலையில் குளிக்கப்போகும்பொழுது அந்தப்படு பாவி அம்மாள், கையிற்பணமில்லாது சக்திபூஜை பண்ணவரும்

பத்தர்களை விரட்டி வெருத்துத் தள்ளுவது போல் என்னையும் களைந்து கீழே எறிந்துவிட்டாள். நான் மலையிலிருந்து கீழேஎறியப் பட்ட பறவையைப்போல் அறிவிழந்து கிடந்தேன். "பட்டகாலிலேபடும், கெட்டகுடியேகெடும்" என்பதுபோல, அங்கேவசித்துக்கொண்டிருந்த தாய்க்கிழவி தோழிப் பெண்கள் எல்லோரும், போம்பொழுதும் வரும்பொழுதும் என் தலையில் ஏறி மிதித்துக் கொண்டே சென்றார்கள். என் தலை விதிவசம் என்று வாளா கிடந்தேன். பிறகுவீடுகூட்டுபவள் எனக்கு வெண்சாமரம்பணிமாறிஎன்னைதடுக்கிவிட்டுத் தெருவிலுள்ள குப்பைமேட்டிற் சேர்த்தாள். அப்புறம் என்னை நாய் நரி கூட நாடவில்லை; நுகர்ந்து பார்க்கவுமில்லை. காக்கை சேவல் முதலியவைகளெல்லாம், காலாற் குப்பையைக் கிளைத்து அதனை என் மேல் அபிடேகஞ் செய்து எலும்பு முடி சூட்டின. இரும்பு, பீங்கான், ஓடு குப்பை கூளம் என்னை உறவு கொண்டாடின. சாக்கடைகளைச் சுத்தஞ் செய்யும் முனிசிபல் வேலைக்காரன், எனக்கு நீலமேக சியாமள வர்ணமுள்ள சாக்கடைப் பன்னீர் தெளித்தான். எழுநாள் இவ்வாறு குப்பையிலே கிடந்து நாறி நாற்றமெடுத்து, வரண்டு சாய்ந்து சருகாய்க் குப்பையோடு குப்பையாய்க் கிடந்து உழன்றேன்.

ஐயகோ! இஃதென்ன வாழ்க்கை! பிறந்து ஒரு வாரத்திற்குள் பகல் வாழ்க்கையாய்ப் போய் விட்டதே! அதற்குள் எவ்வளவு திருவிளையாடல்கள்? எவ்வளவு இன்பமும் துன்பமும்? நான் முன்னே இருந்த நிலை என்ன? இப்பொழுது இருக்கும் நிலையென்ன! பூவுலகிற் பூந்தோட்டத்திற் பிறந்தேன். பத்தியுடன் முத்தன் வளர்க்க வளர்ந்தேன். தேனையும் வாசத்தையும் தெருவெலாங் கமழச் செய்தேன். எங்கள் குலத்தின் பெருமையோ அளவிடற்பாலதன்று. நாங்கள் சுத்தசைவர்கள். கொலை களவு கள் காமம் கோட்பல கனவினுங் கருதாதவர்கள். நாங்கள் சிவனடியார்கள். பல்லோரால் பாடப்பெற்றிருக்கின்றோம். தேவார திருவாசகாதிகளிலெல்லாம் எங்கள் திருமணம் கமழ்கின்றது. எங்களை எடுத்தாளாத தமிழ்ப்புலவர் திலகர்களிலர். அந்தத் தில

கர்களெல்லாரும் எங்களையே காப்புச் செய்யுட்களில், மங்கலச் சொற்களாக வழங்குகின்றார்கள். எங்களிடத்துள்ள காந்தி வேறு யாரிடத்துங் கிடையாது. எங்கள் குருவோ சிறந்த சைவசமய மணி விளக்காகிய கொன்றைப்பூ அடிகளாராவர். எங்களை ஆடவர் பெண்டிர் இருபாலாரினும் பண்டிதர் முதல் பாமரர் ஈறாக எல்லோரும் ஆதரிக்கின்றார்கள். எல்லாத் தெய்வங்களும் எங்களிடத்து விசுவாசம் வைத்திருக்கின்றன. இத்தகைய அருமை பெருமை வாய்ந்த சிவதலத்துதித்த நான் கெட்ட சகவாசத்தினாலன்றோ இக்கதிக்கு வந்து சேர்ந்தேன். தூங்குமூஞ்சிக் கைலாச பண்டாரத்தார், நொண்டிக்குருக்கள் ஆபத்தாரணமய்யர், பூந்துருத்திப் புஷ்பத்தம்மாள் இவர்களுடைய அஸ்த விசேஷமே என்னை இந்நிலைக்குக் கொண்டு வந்து விட்டது. அந்தோ! நல்ல குருக்கள்மாரை நண்ணாது இந்த நொண்டிக் குருக்களிடத்திலே சேர்ந்து பாழிந்தேனே! இப்பொழுதுதான், "தாசிவீட்டை எட்டிக் கூடப்பார்க்கக்கூடாது; அந்தத்தெருவிற்குக்கூடப்போகக்கூடாது." என்ற புத்தி வந்திருக்கின்றது. ஏனென்றால் இந்த விஷயத்தில் அழுந்தி, நான் நிரம்பப்பட்டுப் பழகி விட்டேன். என்னிடத்தில் மணமும் குணமும் இருந்த வரையில், என்னைத் தாசி, தலையில் வைத்துத் தூக்கிச் சுமந்தாள். வைரப் புல்லாக்கு அணிந்த மூக்கில்வைத்து நுகர்ந்தாள். கண்ணோடு கண்ணாக வைத்துக்கொண்டாள். களிபாட்டயர்ந்தாள். நொண்டிக் குருக்களும் திருக்கள்ளூர்வரை பதினாறு மைல் தூக்கிச்சுமந்தார். என்னுடைய மணங் குன்றி ஈரம் புலர்ந்து, நான் வாடிவதங்கி வற்றி வரண்டபோது புறக்கணித்துக் குப்பையிலே தள்ளப்பெற்றேன். குப்பை யென விள்ளப்பெற்றேன். ஆகலான் என்னை நாடுவாருமிலர்; தேடுவாருமிலர். இப்படியே, பணமுள்ளவரையில், "ஐயா, சாமி, என் ஆசைக்கண்மணியே" என்பார்கள். கையும் மெய்யும் வரண்டு போனால் நடுத்தலையில் நன்றாகக்குட்டி அனுப்புவார்கள். உண்மை இவ்வாறாக, குளிக்கப்போய்ச் சேற்றைப் பூசிக்கொள்வதுபோல் நாம் ஏன் சாக்கடையென்று நன்றாகத்தெரிந்துகொண்ட பிறகும்

அதில் ஸ்நாநம் பண்ணல் வேண்டும்? அந்தோ! இதற்குக்காரணம் நமது அறியாமையே யன்றோ?

ஆ! நிலையில்லா இளமையையும் அழகையும் மணத்தையும் உடையோம் என்று இறுமாப்புக்கொண்டு, ஒழுக்கத்தைக் கைவிட்டுத், தாசிவீட்டிற்குப் போனால் குட்டுப்பட்டு முட்டுப்பட்டு, அடிபட்டு மிதிபட்டு, நாயாய்க்கிடந்தலைந்து, பணமிலாப் பிணமாய் மண்ணோடு மண்ணாய்ப் போகநேருமன்றோ? ஆதலால் எனது அருமைச் சகோதரர்களே! நீங்கள் எல்லோரும் இந்தமாய வலையிற் சிக்குண்டு உழலாதீர்கள! உங்கள் உடலையும் உடமையையும் கெடுத்துக்கொள்ளாதீர்கள்!! எச்சரிக்கை!!!

ஆயிரம் பொன் வருவதாக இருந்தாலும், கெட்டவர்கள் சகவாசத்தை வெறுத்துத் தள்ளுங்கள்! நல்ல சேர்க்கையே சிறந்தது. சந்தன மரத்திலே படர்ந்திருக்கின்ற கொடி, சந்தனமணங் கமழும். வேம்பிலே படர்ந்திருப்பது வேம்பு நாறும். அவ்வாறே நல்லிணக்கமல்ல தல்லற்படுத்தும். ஆதலாற் பாம்பொடு பழகலாகாது. சேரிடமறிந்து சேருதலே உத்தமம். போகாத இடந்தனிற் போய் அல்லற் படுவதே அதமம். போக்கிடமறிந்து போவதே புனிதம். புனித நல்லறம் பலசெய்து மறங்கடிந்து புண்ணியத்தைத்தேடினாற்றான் நமக்கு முத்தி சித்திக்கும்.

தையலில்லம் புகும்போதென் § சுதன்குரலைக்
கேட்டொதுங்கித் தாழ்வா ரத்தில்
பையவொன்றிச் செவிகொடுத்தேன் பாவினைப்
பார்த்தகோதை பணமீ யென்றாள்
ஐயனிறந் திடிலெல்லா முனதென்றான்
அவன்றூங்கும் அமயம் பார்த்தோர்
† சையமெடுத் தவன்றலைமேற் போடுவாய்
போடுமுன்னான் தழுவே னென்றாள்.

—வேதநாயகம் பிள்ளை.

§ சுதன்—மகன். † சையம்—கல்.

சமய வாழ்க்கை.

ஸ்ரீமாந்
ச. சச்சிதாநந்தம் பிள்ளை B.A.,L.T. அவர்கள்
எழுதியது.

"சேரமான் பண்டைத் தொண்டரொடும்
அவன்றன் குறிப்பே குறிக்கொண்டு
போமா றமைமின் பொய்நீக்கிப்
புயங்கனாள்வான் பொன்னடிக்கே."

—மாணிக்கவாசகர்.

இக்காலத்தில் மக்களிற் பெரும்பாலார் நடத்திவரும் வாழ்க்கையைப் பார்க்கும்போது அதில் சமயமென்பதற்கு இடம் அரிதாயிருப்பது புலப்படும். "சமயத்தைக் கவனிப்பதற்கு இது சமயமன்று" என்று பலர் திட்டமாய்ச் சொல்லி விடுகிறார்கள். கழிக்கத் தகுந்த பழைய அநாகரிகங்களில் சமயவாழ்க்கையும் ஒன்றென்பது அவர்கள் கொள்கை. ஐரோப்பாவில் நாம் கண்ட "Healthy Godlessness" (கடவுளிருப்பை மறந்திருக்கும் ஒரு நலம்) ஸூயெஸ் முதல் சிங்கப்பூர் வரையிலுள்ள நாடுகளில் தமக்குப் புலப்படாதது குறித்து இரங்குகின்றார் ஓர் ஐரோப்பிய ஆசிரியர்! "நாகரிகமாய் உண்ணவும், உடுக்கவும், உறங்கவும், ஆடவும், ஓடவும், பாடவும், புலனுரப் பிரபஞ்சக் கேளிக்கைகளைக் கண்டு களிக்கவும், இவற்றிற்கெல்லாம் இன்றியமையாத செல்வத்தை மேன் மேலும் வளர்க்கவும் பொழுது அதிகமாய் வேண்டியிருத்தலால், கண்ணுக்கெட்டாத வொரு கடவுளைப் பற்றிக் கவலைப்பட நேரமேது?" என்பர் பலர். இம்மனப் பான்மை பரவி விட்டதற்குச் சான்றுகள் பலவுள. தேவாலயங்களுக்குச் செல்வோர் தொகை அருகிப்போயிற்றென்னும் கூக்குரல் மேல் நாடுகளிலும், நமது நாட்டிலும் கேட்கப்படுகின்றமை ஒரு சான்று. மக்கள் வாழ்வில் அதர்மம் அதிகமாகி வருகின்றது மற்றொரு சான்று.

இவ்வாறு, சமயத்தைக் கைக்கொள்ளல் சழக்கு என்று தள்ளி "நாகரிக" வாழ்க்கையைப் பெருக்கி வந்த மேல்நாடு இப்போது எந்நிலையிலுள்ளது? அதன் கோரத்தை விரிவாய் வருணிக்க இங்கிடமில்லை. நவீன நாகரிக மென்னும் ஆசுர சிருஷ்டி, ஐரோப்பியப் பெரும் போரின் யுத்த களத்தில் பொடிபட்டுச் சிதறிக்கிடக்கின்றது. அந்நாகரிகத்தைக் கொண்டெழுந்த அரசாங்கங்கள் பல, காகித அட்டைகளாற் கட்டப்பட்ட கட்டிடம் போல் கலைந்து போயின. லக்ஷக்கணக்காக மக்கள் ஒருவரை ஒருவர் சுட்டுக் கொன்று கொண்டனர். லக்ஷக்கணக்கான பேர்கள் உறுப்பிழந்து வருந்திக் கொண்டிருக்கின்றனர். சண்டை முடிந்தும் நிலைத்த சமாதானம் ஏற்படவில்லை. "வேலை கிடைக்கவில்லை. உணவு கிடைக்கவில்லை. நியாயங் கிடைக்கவில்லை." என்னும் அவலமொழிகள் இன்னும் ஓய்ந்தில. பழத்தைக்கொண்டு மரத்தை மதிக்க வேண்டுமென்பது பழமொழி. அங்ஙனமாயின், மேற்சொன்ன துன்பக்கொத்தைத்தந்த நாகரிகமரம் நல்லதோ தீயதோ என்று நாம் சொல்லவும் வேண்டுமோ?

ஆழ்ந்து பார்க்கின் சமயச்சார்பில்லாமையே இந்த நாகரிகத்தின் சிறப்பியல்பு என்று தோன்றும். எனவே சமயச் சார்பு எத்தகையது என்று நன்காராய்தல் இக்காலத்தவர்க்கு ஒரு முக்கிய கடமையாம். ஆதலின் சமயமென்றாலென்ன வென்று விசாரிப்போம். இச்சொல் "வேளை" என்னும் பொருளிலும், "உலகுயிர் கடவுளைப் பற்றிய கொள்கை" என்னும் பொருளிலும் பெரும்பாலும் வழங்கும். மற்றும் சிலபொருளுமுண்டு. அதன்வேர்ச்சொல்லை ஆராயின், "நன்றாகச் செய்யப்பட்டது" என்ற பொருள் கிடைக்கின்றதென்ப. ஆங்கிலத்தில் இப்பொருளில் Religion என்னுமொழி வழங்குகின்றது. அது Re-ligre என்னும் இரண்டு லத்தின் பாஷைச் சொற்களாலானது. இவற்றின் பொருள் "மீண்டும் பிணிப்பது" என்பதாம். நமது மொழியில், "மார்க்கம், நெறி" என்பனவும் இதற்கு மறு சொற்களாய் வழங்குகின்றன. "சமய நெறி" என்பது பண்புத் தொகையாய் வருவதும் ஒரு நூற் பெய

சிற் காணக்கிடக்கின்றது. இவ்வுண்மைகளைப் பார்க்குமிடத்து உயிர்கள், இறைவனைச் சென்றடைதற்கு அவனோடு மீண்டும் பிணிப்புறுதற்கு நன்றாகச் செய்யப்பட்டதொரு வழி என்னும் பொருளைச் 'சமயம்' என்னும் சொல்லிற் காணலாம். "வந்த வாறு எங்ஙனே? போமாறு ஏதோ?" என்று தமிழ் வேதம் கேட்டது, இந்நெறியைக் குறித்தும் என்க. பெருநெறி ஒன்றானால் அதில் ஆங்காங்கு தங்குமிடங்களும் வேறு பல கிளைவழிகளின் சந்திப்பும் இருத்தல் இயல்பே. அன்றியும் அவ்வழி ஓரிடத்திற் போய் முடிவு பெறுவதாயுமிருக்கும். "ஒன்றது பேரூர்; வழியாறதற்குள" என்றார் திருமூலர். மோக்ஷமென்னும் ஊருக்கு அறுவகைச் சமயங்களென்னும் ஆறுவழிகளுள என்பது அவர் கருத்து. வழி முடியுமிடம் முத்தி. எனவே, அவ்வழியிற் செல்லுதற்குரியோர் ஆன்மாக்கள் என்பதும் பெறப்படும். இந்நெறியிற் செல்வதே இங்குச் சமய வாழ்க்கை என்று குறிக்கப்படுகிறது.

இனி உருவகத்தை விடுத்து, சமய வாழ்க்கையின் அடிப்படையான இலக்கணங்களிவையெனக் காணமுயலுவோம். மற்ற விஷயங்களிற் போலவே இதிலும் கருத்து வேறுபாடுகள் உண்டு. அவை மக்களின் அறிவு ஆராய்ச்சி அநுபவம் தூய்மை ஆகிய இவற்றின் பக்குவமுதிர்ச்சிக்கேற்றவாறிருக்கும். இவற்றிற்சிறந்து விளங்கும் பெரியாரைத் துணைக்கொண்டு அவர்கள் உணர்த்தினவற்றை மட்டும் இங்குக் குறிக்கொள்ளல் நலம். இன்னார் கூறுவதையெல்லாம் ஆழ்ந்தகன்று ஆராயின், எல்லா உயிர்களும் எல்லாப்பொருள்களும் ஒரு பெருங் கட்டிற்குட்பட்டியங்குகின்றன வென்னும் உண்மை உணர்ச்சி, இவர்தம் வாழ்க்கை மேம்பாட்டிற்கு ஒரு அடிப்படையாயிருத்தல் முதன்மையாப் புலப்படும். இவ்வாறு எல்லாவற்றையும் தனக்குள் வைத்து இயக்கி இன்புறுத்தும் அருட்பெருந் தடக்கடலாகிய ஒரு பரமசக்தி உண்டென்பதை, அனுபவ ஞானிகள் பற்பல அமுதமொழிகளால் வெளியிட்டுள்ளார்கள். எடுத்துக்காட்டாக இரண்டொன்று காலாம். அந்த பரமசக்தியைக் குறித்து ஒரு ஞானச் செல்வர்

'அங்கிங்கெனாதபடி எங்கும் பிரகாசமாய் ஆனந்த பூர்த்தியாகி, அருளொடு நிறைந்தெது? தன்னருள்வெளிக்குளே அகிலாண்ட கோடியெல்லாம், தங்கும்படிக் கிச்சைவைத் துயிர்க்குயிராய்த் தழைத்ததெது?'' என்று பாடியுள்ளார். பண்டைக்காலப் புலவரொருவர்,

"கல்லொருஉ திரங்குமல்லற்பேரியாற்று
நீர்வழிப் படூஉம்புணைபோல், ஆருயிர்
முறைவழிப்படூஉம் என்பது
திறவோர் காட்சியிற்றெளிந்தனம்''.

என்று வெளியிட்டதும் இவ்வுண்மையினையே. உலகப்பொருளைக் காண்டல் கருதல் என்னும் அளவைகளால் துருவித் துருவிச் சோதிக்கும் தற்கால ஆராய்ச்சியாளரும், பிரபஞ்ச அமைப்பின் ஒழுங்கைப் பல்லாயிர உதாரண வாயிலாய் விளக்குகின்றார்கள். பிறிதொரு சம்பந்தஞ் சிறிதுமில்லாப் பொருள் மண்ணினுமில்லை, விண்ணினுமில்லை, அறிஞர் எண்ணினுமில்லை என்று திண்ணமாய் நாட்டுகின்றார்கள். இங்ஙனம் எல்லாவற்றையும் பிணித்து ஓரமைப்புக்குட்படுத்தி, நடத்தி வரும் பேரறிவும் பேராற்றலு மிக்க பரம்பொருள் ஒன்றுண்டென்பது மட்டும் அவர்கள் துணைபால் நம் அறிவுக்கும் எட்டுகின்றது. அப்பொருளின் தன்மையை உள்ளவாறு முழுதுணர்தல் வெளிமுக நோக்கிற் கெட்டுவதன்று. ஆதலாற்றான், "ஸயன்ஸில் அப்பொருளினியல்பு விவரிக்கப்படுவதில்லை. தத்துவ ஆராய்ச்சியும் சமயவாழ்க்கையுமே அவ்வுண்மை உணர்தற்குரிய சாதனங்கள். இவற்றைச் செவ்வனே கையாளுவோர் பன்னாட்டினுமிருந்தனர். அவர்கள் அப்பரம்பொருளியல்பை உணர்ந்து, ஓதக்கூடிய அளவும் ஓதி, உலகிற் குபகரித்திருக்கின்றனர்.

எனவே, பலநிற மணிகளுடே ஒரு நூல் நுழைந்து நின்று அவைகளியாவற்றையும் ஒழுங்குபடுத்துவது போல எல்லாவற்றிற்கும் ஆதாரமாய் நின்று நிரல்படுத்தும் பரம்பொருள் ஒன்றனிருப்பையுணர்தல் சமயவாழ்க்கையின் முதலிலக்கணம் என்பது பெற்றாம். (தொடரும்.)

யாக்கையின் பயன்.

ஆக்கையாற் பயனென்—அரன்
கோயில் வலம் வந்து
பூக்கையா லட்டிப் போற்றியென் னாதவிவ்
யாக்கையாற் பயனென்.

குனித்த புருவமுங் கொவ்வைச் செவ்வாயிற் குமிண் சிரிப்பும்
பனித்த சடையும் பவளம்போன் மேனியிற்பால் வெண்ணீறும்
இனித்தமுடைய வெடுத்தபொற் பாதமுங் காணப்பெற்றால்
மனித்தப் பிறவியும் வேண்டுவதே யிந்த மாநிலத்தே.

—திருநாவுக்கரசர்.

பாயுடையார் விரிந்தபழி யழல்வழுதி
யுடல்குளிப்பப் பதிகமோதுந்
சேயுடையா ரணாந்தினைக்குஞ் செவியுடையா
ரளவிறந்த திசைகளெட்டுந்
நேயுடையார் பொன்னிதழித் தொடையுடையார்
விடவரவஞ் சுற்றுமால
வாயுடையார் புகழ்பாடப் பெறுவேமேல்
வேண்டுவதிம் மனித யாக்கை.

மணமகனே பிணமகனாய் மணப்பறையே பிணப் பறையாய்
அணியிழையார் வாழ்த்தொலிபோ யழுகையொலி யாய்க்கழியக்
கணமதனிற் பிறந்திறமிக் காயத்தின் வரும்பயனை
யுணர்வுடையார் பெறுவருணர் வொன்றுமிலார்க் கொன்றுமிலை.

—பரஞ்சோதிமுனிவர்.

உடம்பினைப் பெற்ற பயனாவ தெல்லாம்
உடம்பினில் உத்தமனைக் காண்.

பிறப்பினாற் பெற்ற பயனாவ தெல்லாம்
துறப்பதாந் தூநெறிக்கட் சென்று.

உடம்பினாற் பெற்ற பயனாவ தெல்லாம்
திடம்பட வீசனைத் தேடு.

—ஔவைப்பிராட்டியார்.

வீரகாகளம்.

(வெற்றி வீரன் எழுதுகிறார்.)

அருச்சுனன் ஒரு சுத்தவீரன். விளையும் பயிர் முளையிலே தெரியும் என்றபடி அவன் சிறுபிள்ளையாயிருக்கும்போதே சுத்த வீரனாக இருந்தான். அவன் இந்தக்காலத்துப் பிள்ளைகள் மாதிரி மழுமட்டையாக இருப்பதில்லை. அவனுக்கு சுமார் பதினைந்து வயதிருக்கும். அவர்களது குலத்தொழிலாகிய வில்வித்தையில் கைதேர்ந்துவிட்டான். அவனது குரு துரோணாச்சாரியார். அவரைப் பாஞ்சால தேசத்தரசன் மதிப்பின்றி நடத்திவிட்டான். தாம் உயிரோடிருக்கும்போதே செய்ததற்குப்பதில் செய்துவிட வேண்டுமென்பது துரோணாச்சாரியின் நோக்கம். அதற்குத் தமது மாணவன் அருச்சுனன்தான் சரி என்று கண்டெடுத்தார். "அப்பா! அருச்சுனா! நீ சென்று எனக்குக் காணிக்கையாக பாஞ்சால வரசனைக் கட்டுப்படுத்திக்கொண்டு வந்து கொடு" என்று துரோணாச்சாரியார் கட்டளையிட்டார். உடனே அருச்சுனனாகிய வெற்றி வீரன் புறப்பட்டான். பாஞ்சால வரசனோடு சண்டையிட்டுப் பிடித்துத் தன் தேர்க்காலில் கட்டிக்கொண்டு வந்து தன் ஆசிரியனுக்குக் காணிக்கை செலுத்தினான். இவன்தான் சுத்தவீரன். தான் மாணவனாயிருந்தாலும், சிறுபிள்ளையாயிருந்தாலும், எந்த விதமான சேனையும் தமக்கு உதவிக்கு இல்லாதபோனாலும், ஒன்றையும் கவனியாது புறப்பட்டு விட்டான். வீரனுடைய மனதில் என்ன உண்டாகும்? கொண்டகாரியத்தை முடிப்பதொன்று! அல்லது விண்ணுலகம் சேர்வதொன்று! இவையன்றி ஒரு வீரன் மனத்தில் பகைமை முற்றும் வழியில் வேறெதுவும் தோன்றுவதில்லை. பாஞ்சால அரசனைக் கட்டிக்கொண்டுவர வேண்டியது கடமை என்று நமது அருச்சுனக் குழந்தை கருதிற்று. உடனே புறப்பட்டது. வேறொரு உதவியையும் எதிர்பார்க்க வேண்

டாத தன்னம்பிக்கையுடைய காளை எதையும் எதிர்பார்க்குமா? மனவன்மை யிருக்குமானால் உலகத்தில் யாதுதான் கிட்டாது; சுத்த வீரனுக்குத் துணை யெதற்கு!

* * *

பாகவதத்திற்குப் பிரஹ்லாதனும், ராமாயணத்திற்கு ஆஞ்சநேயரும்போல பாரதத்தின் மகிமைக்குக் காரணராக விளங்குபவர் பீஷ்மாச்சாரியாராவர். இவர் சிறு பிள்ளையாக இருக்கும்போது இவரது தாயார் போய்விட்டார். தந்தையான சந்தநு ராஜன் காட்டிற்கு வேட்டைக்குச் சென்றார். அங்கே வேடகுலத்தில் வளரும் மச்சகந்தியென்ற ஒரு பேரழகியைக் கண்டு மோகித்து மறுமணம் முடிக்க விரும்பினார். கேட்டார். அவள் தகப்பன் இணங்கினானெனினும் தன் மகள்வயிற்றுப் பிள்ளைக்குப் பட்டங் கிடைக்குமா? என்றான். முன்னமே பீஷ்மருக்கு இளவரசுப் பட்டங் கட்டியாய் விட்டபடியால் அரசன் பதிலிறுக்க முடியாத வனாகி வீடு சென்றான். அன்று முதல் மிக்க மோகமுடையவனாகிப் பாயும் படுக்கையுமானான். இதனையறிந்த போறிஞரான பீஷ்மர் சாரதியை வினவினார். உண்மையறிந்தார். உடனே காட்டிற்குப் புறப்பட்டார். வேடனைக்கண்டார். "ஐயா உன் மகளையென் தகப்பனுக்குக் கொடு! அவள் வயிற்றிற் பிறக்கும் பிள்ளைக்கே பட்டங் கட்டுவேன்; எனக்குப் பட்டம்வேண்டாம்" என்றார். அதற்கு வேடன், "சரிதான்; உனக்குக் குழந்தை பிறந்து அவன் பரம்பரைப் பாத்தியம் வேண்டுவானானால் என் செய்வது" என்றான். சுத்தவீரன் முன்வைத்த காலைப் பின் வைப்பனோ? கட்டிளங்குமரனான பீஷ்மன் என்ன பதில் சொன்னார்? "ஆனால் சரி; நான் கலியாணமே செய்துகொள்வதில்லை" யென்று ஆணையிட்டார். பார்த்தீர்களா என்னவீரம்! எவ்வளவு தன்மறுப்பு! பெண்ணைக் கூட்டிக்கொண்டு வந்தார். தகப்பனது நோயை நீக்கினார்; தகப்பன் விரும்பிய பொருளுக்காகத் தனது இகபோகத்தை— மணிமுடிமன்னர்கள் போற்றும் அரசாட்சியை—யோகியும் இண்டாடிடலையும் மாதர்போகத்தை இமைப்பொழுதில் உதறி யெறிந்த சுத்தவீரன் பீஷ்மாச்சாரியைத் தவிர வேறு யாவரே உலகில்

தோன்றியுள்ளார்! கேவலம் பொன்னையும் பெண்ணையும் பொருளையும் மண்ணையும் கவ்விக்கொண்டு மாண்டுபோகும் மக்கள் மலிந்த இவ்வுலகில் யாவையும் துறந்து நின்ற வீரன் பீஷ்மாச்சாரி யென்னும் கட்டிளங்காளையன்றோ?

* * *

துரோணாச்சாரியார் மாணவனாயிருந்து படித்த காலத்தில் பாஞ்சாலதேசத்து இளவரசனான துருபதேயன் என்பவனும் படித்துவந்தான். இருவரும் மிக்க தோழமை கொண்டார்கள். இவ்விரு பள்ளிச் சிறு நண்பர்களும் மனமொன்றி மகிழ்ந்திருக்கும்போது "எனக்குப் பட்டங்கிடைத்தவுடன் எனது அரசாட்சியில் பாதியை உனக்குத் தருவேன்" என்று அரசிளங்குமரன் கூறினான். சரியென்றான் துரோணனாகிய மாணவன். காலங்கடந்தது. இளவரசனுக்கும் பட்டங்கட்டப்பட்டது. துரோணாச்சாரியும் மனையறம் இனிதியற்றி ஒரு ஆண்மகவைப்பெற்றார். பிள்ளைக்குப் பால் கிடைக்கவில்லை; அப்போது பழய நண்பன் ஞாபகம் வரவே அரண்மனைக்குச் சென்று "நண்பனே! பாதிபரசுரிமை அளிப்பதாக வாக்களித்தனையே! இப்போது ஒரு பசுமாடு கொடு!" என்று கேட்டனன். உடனே அரசன் பழய நட்புரிமையைமறந்து--வாக்களித்தமையைமறந்து—நானா பாதிபரசளிப்பதாகவாக்களித்தவன் போ வெளியே என்றுகூறிப் பிடித்துத்தள்ளச்செய்தான். துரோணமுனிக்குக் கோபம் மூண்டது. ஆத்திரம் மிகுந்தது. எனினும் பொறுமை மேற்கொண்டார். சுத்தவீரனான துரோணன் மிகுந்த ஆற்றலிருப்பினும் வில்லெடுக்கவில்லை. "அப்படியா? சரி. எனது மாணவனைக்கொண்டு உனக்குக்கற்பிக்கிறேன்" என்றார். அப்படியே அருச்சுனனுக்குப் படிப்பை அளித்தார். அவனைக்கொண்டு துருபதனைத் தேர்க்காலில் கட்டிக்கொண்டுவரச்செய்து "ஏ துருபதா! செல்வச்செருக்கால் புத்திமயங்கியமூடா! என்னே உனதுவீரமிருந்தவாறு? இப்பொழுது உன்னுடைய அரசுமுற்றும் எனதல்லவா? போ! பிழைத்துப்போ! உனது புன்பொருள் எனக்கு வேண்டுவதில்லை" என்று திருப்பியனுப்பிவிட்டார். இவர் தான் வீரர்.

பழமொழிக் களஞ்சியம்.

(முதுமொழிக்காஞ்சியார் எழுதியது.)

உலகத்து ஜனங்களில் பலர் பலவாறு முயற்சிசெய்கின்றனர். வயிற்றுப்பாட்டுக்கும் சுகபோகத்துக்கும் வழக்கு வம்புக்கும் பேருக்கும் பெருமைக்குமே பெரும்பாலான ஜனங்கள் இரவுபகலாகக் கஷ்டப்படுகின்றனர். ஆனால் "இந்த மனிதசரீரம் சிலநாள்தானிருக்கும்; ஆனால் அழிந்துபோவது திண்ணம்." என்ற உண்மையை உணர்ந்து அரும்பெரும் முயற்சிகளைச் செய்யச் சிலர் முன் வருகின்றனர். யார் எந்த முயற்சியைச் செய்தாலும் அம்முயற்சியில் தலைமைபெற்றிருப்பவர் தனியாக ஒன்றையுஞ்செய்யமுடியாது. ஆனால் அவர் காட்டும் வழிகளில் ஏனைய ஜனங்கள் சரியாகச் சென்றால்தான் பயன் கிடைக்கும். அவ்வாறு செல்லாமையால் பலமுயற்சிகள் இடையில் தடைப்பட்டுப்போகின்றன. அதற்காக அப்பெரியார் அம்முயற்சியைச் செய்யாது விடமாட்டார்கள். இதற்கிடையில் அவர்களைப்பற்றி யிகழக்காரணமில்லை. 'ஆனைக்கும் அடி சறுக்கும்''.

* * *

இந்த நாட்டு ஜனங்கள் பெரியார் வாக்கின் உண்மையை யுணராது கேவலமான படிப்பற்றவர்களையும் தெய்வ உணர்ச்சியற்றவர்களையும் ஆசிரியராகக் கருதி வருகின்றனர். முற்காலத்தில் உடம்பில் நோய்வந்தாலும் வேறு வகையாக ஏதாவது துன்பமுண்டானாலும் இறைவனை வணங்கிவாழ்த்தி அபிஷேக ஆராதனை செய்து இன்புற்று வாழ்ந்தனர். இப்போதைய ஜனங்களுக்கு சுயநல மிகுதியால் உண்மையான தெய்வநம்பிக்கை கிடையாது. வயிற்றில் சாதாரணவலி யுண்டானாலும் வீதியில் ஒரு கல் தடுக்கினாலும் கோடங்கியடிக்கவும் ஆடு கோழிகளைக் கழுத்தறுக்கவும் முன்வந்து விடுகின்றனர். எங்குங்கழுத்தறுப்பு! எங்குங்கொலைப் பலி! எங்கும் பிசாசு ஆட்டம்! பிசாசுப்புலவர்களின் சாமிபாட்டங்

கள் வேறே! பேய் எங்கிருக்கிறதோ? ஆடு கோழிதான் கேட்கிறதோ? ஆனல் ஒன்று! "அரண்டவன் கண்ணுக்கு இருண்டதெல்லாம் பேய்தானே!"

* * *

தமிழ்நாட்டில் நல்ல தமிழ்ப் பள்ளிக்கூடங்கள் கிடையா. தகுந்த தமிழபிமானமுள்ள உபாத்தியாயரை யாதரிப்பாருங் கிடையாது. தமிழைப்படிப்பவரும் அதிகமில்லை. படித்தால் அதைக்கொண்டு வயிறுவளர்க்க வழியையுங்காணவில்லை. இதற்கு விமோசனந்தேட நாதியில்லை. கல்வியில்லாதவிடத்தில் கண்கெட்டவிடத்தில் குருட்டுத்தனம் மிகுந்து நிற்குமென்று கூறவேண்டியதில்லை பணக்காரர் தமிழ்க்கல்வியை ஏன் முன்னுக்குக்கொண்டுவர முயலலாகாது? மாயை சுற்றுகிறது. ஆங்கிலக் கல்விக்கு லட்ச லட்சமாகப் பணம் கொடுக்கப்படுகிறது. இன்னும் எதெதற்கெல்லாமோ கோடிக்கணக்கான பொருள் போகிறதே? தமிழ்மொழி வளர்ச்சிக்காகப்பொருளை வாரியிறைத்தாலல்லவா தமிழ்நாடு தமிழ் நாடாகும்! இதை விட்டு விட்டு எங்கெங்கோ சென்று என்னவோ தருமம் செய்கிறார்களே! "தன்னைப் பெற்றதாய் கிண்ணிப்பிச்சையெடுக்கிறள் தம்பி கும்பகோணத்தில் கோதானம் செய்கிறன்."

* * *

உலகத்திலுள்ள பல மக்கள் வார்த்தையொன்று செய்கை யொன்ருக வாழுகின்றனர், வேறு சில மக்கள் வெளிவேடத்தில் கைகாரராகவிருக்கின்றனர். விபூதி மூட்டை மூட்டையாகப் பூசுகின்றனர். எப்போதும் சிவ சிவ என்று சொல்லுகின்றனர். பரிசுத்தமாக வாழ்க்கையை நடத்துபவர் மாதிரி நடக்கின்றனர். சிவ புராணங்களை மிக அன்போடு கேட்பவராகக் காணப்படுகின்றனர். தினந்தோறம் தேவார திருவாசக பாராயணஞ் செய்கின்றனர். தினமொருகால் திருக்கோவில் வலஞ்செய்கின்றனர். பார்த்தாற் பரம சைவராகத் தோன்றுகின்றனர். ஆனல் வீட்டிற்குப் போனவுடன் கருப்பணசுவாமிக்குக் கிடாய்ப் பலி கொடுப்பதில் முதலாவது பேர்வழியாக விருக்கின்றனர். ஆட்டை அறுத்தவித்து முழுத்தட்டாகத் தட்டி விடுகிறர்கள். என்செய்வது? "படிப்பது திருவாசகம் இடிப்பது சிவன்கோவில்"

சதங்கை யொலி.

சுந்தரர் திருநாள்.

சுந்தரமூர்த்தி சுவாமிகள் கைலைக்குச் சென்ற திருநாள் ஆடி மீ ௪௯௨ வருகின்றது. அத்திருநாளில் தமிழ்மக்கள் யாவரும் செந்தமிழ்ப்புலவராம்சுந்தரர்க்குவிழாக்கொண்டாடுதல்வேண்டும். தமிழ்நாட்டு மக்கள் எந்த தேசத்திலிருப்பினும் அங்கெல்லாம் இவ்விழா நடைபெறுதல்வேண்டும். அன்று சுந்தரர் சரிதபாராயணமும் அவரிசைத்த தமிழ்வேத முழக்கமும் செய்தல் வேண்டும். இதுகாலைத் தமிழ்நாடும் தமிழர் சமயமுமிருக்கின்ற ஒடுங்கிய நிலைமை மாற்ற ஆலால சுந்தரர் போன்ற பெருமக்கள் தமிழ்நாட்டிற் பிறக்க வேண்டுமென்று அத்தினத்தில் விரதமிருந்து எம்பெருமானைத் துதித்தல்வேண்டும். தமிழ்நாட்டிலுள்ள சங்கங்களிலும், குருபூஜை மடங்களிலும், பள்ளிக்கூடங்களிலும், திருக்கோவில்களிலும் சுந்தரர் தேவாரம் முழங்குதல் வேண்டும். விபூதி பூசுபவர் அத்திருநாளில் சுந்தரர் தேவாரத்தில் ஒரு பாசுரத்தையாவது ஓதி—அல்லது ஓதக்கேட்ட பின்னரே உணவெடுத்தல் வேண்டும். சைவகுலத்திற் பிறந்து வருஷத்திலொருநாளில் ஒரு பாசுரத்தையாவது ஓதாது விழுங்கும் அன்னமும் அன்னமாமோ?

* * *

தத்துவ இஸ்லாம்!

இப்பெயர்கொண்ட மாதசஞ்சிகையின் நாலாவது கமலத்தின் ௫, ௬, ௭-வது இதழ்கள் நமது பார்வைக்கு வரப்பெற்றோம். நாச்சியார் கோவில் முஸ்லிம் சங்கத்திலிருந்து வெளிவரும் இவ்வரிய பத்திரிகை எளிய நடையில் உயரிய விஷயங்களைத் தாங்கி வருகின்றது. இஸ்லாம் மதத்தின், உண்மையான அரிய கொள்கைகளை விளக்குவதோடு பிறமதத் துவேஷமில்லாமல் சமரஸ நோக்கமுள்ள விபாசங்களையே தாங்கிவருவதற்கு நாம் மிக மகிழ்ச்சியடைகிறோம். இஸ்லாமியர்களும் இஸ்லாம் மதத்தின் உண்மைகளையறிய விரும்பும் ஏனையர்களும் இப்பத்திரிகையைக் கட்டாயம் படித்தல் வேண்டும். இம்மாதிரியான நோக்கங் கொண்ட பத்திரிகைகளை நஞ்செந்தமிழ் நாட்டில் தோன்றவேண்டுமென்று நாம் விரும்புகின்றோம். "மகமதிய மதத்தவர் முரட்டு சொபாவமுள்

ளவர்" என்று சாதாரணமாக ஜனங்களால் சொல்லப்படும் வார்த்தைக்கும் கயிராயகத்தின் அரிய கொள்கைகட்கும் சம்பந்தமில்லையென்பது இப்பத்திரிகையைத் தொடர்ந்து படிப்பார்க்கு இனிது விளங்கும். அழகான காகிதத்தில் உயர்ந்த முறையில் அச்சிடப் பெறுகின்றது. வருஷ சந்தா உள்நாட்டுக்கு ரூ. ௩. வெளிநாட்டுக்கு ரூ. ௪. வேண்டுவோர் "மானேஜர், முஸ்லிம் சங்கம் நாச்சியார் கோவில்" என்றெழுதிப் பெற்றுக்கொள்க.

* * *

நித்திய கரும விளக்கம்!

இது ஒரு அருமையான நூல். துடிசைக்கிழார் அ. சிதம்பரனார் என்பவரால் எழுதப்பெற்று ஆரணி சமரஸ சன்மார்க்க சங்கத்தவரால் வெளியிடப் பெற்றிருக்கின்றது. ஆஸ்திகங்குன்றி நாஸ்திகம் பரவிநிற்கு மிந்நாளில் வெளிவந்திருக்கும் இந்நூலை மகிழ்ச்சியுடன் வரவேற்கின்றோம். நமது முன்னோர்கள் "இன்ன காரியத்தை இப்படித்தான் செய்தல் வேண்டும்" என்று நூல்களில் விதித்துள்ளார்கள். அந்தக் காலத்து மக்கள் அதனையேற்று ஒழுகினர். அந்நூல்களில் நம்பிக்கையற்று அவற்றைப் பின்பற்ற வேண்டிய அவசியமென்னவென்று சங்கிக்கும் தற்கால மக்களுக்கு தினந்தோறுஞ் செய்யவேண்டிய கர்மங்களை யுக்தி அநுபவங்களின் மூலமாக இந்நூல் இனிது விளக்குகின்றது. நூல்களிலுள்ள உள்ளுறைப் பொருள்களையறிய முடியாத ஜனங்களிடையில் மீண்டும் மீண்டும் அம்மாதிரியான நூல்களை யெழுதி வெளியிடாமல் காலமறிந்து எழுதப் பெற்றிருக்கும் இந்நூலை யாவரும் படித்தின்புற வேண்டுமென்று நாம் விரும்புகின்றோம். இதன் விலை அணா ௯. வி. பி. சார்ஜ் வேறு. வேண்டுவோர் "காரியதரிசி, சமரஸ சன்மார்க்க சங்கம், ஆரணி (North Arcot)" என்ற விலாசத்திற் கெழுதிப் பெற்றுக் கொள்க.

* * *

மாணிக்கவாசகர்.

ஸ்ரீமத் மாணிக்கவாசகரின் திருநாளன்று பலவிடங்களில் சிவநேசச் செல்வர்கள் கொண்டாடி யிருக்கின்றனர். பலர் அன்று விரதமிருந்திருக்கின்றனர். சைவசமயப்பற்று உண்டாவதற்கு அடியார் பக்தியே முக்கியமானதாகும். "சிவனடியார்க் கன்பிலாச் சிந்தையே இரும்பு" என்று பெரியோர்கள் கூறியிருக்கின்றார்கள். மணிவாசகப் பெருமானது திருநாளைக் கொண்டாடிய சமயாபிமானச் செல்வரைப் போற்றுகின்றோம்.

பொது.

கதர் நூலைக் கெட்டிப்படுத்தும் மார்க்கம்:—பஞ்சிலிருந்து கண்டாக நூற்றவுடனே மேற்படி நூற்கண்டுகளை, தண்ணீரில் நனைத்து, இட்டலிப் பானையிலேனும் வேறு மண்பாண்டங்களிலேனும் ஜலத்தை முக்கால் பாகம் விட்டு மேல் வஸ்திரம் கட்டி அதன்மேல் கண்டுகளை வைத்து மற்றொரு பாத்திரத்தினால் மூடி சரியான ஆவி கிளம்பி நாலாபக்கமும் வந்தவுடனே ஒரு கண்டை எடுத்து இழுத்துப்பார்த்தால் நூல் வெந்திருப்பதும் முறுக்கிக்கொள்ளாமையும் தெரியும். உடனே அடுப்பைவிட்டு இறக்கி ஆறவைத்து மேற்படி கண்டுகளை எடுத்துக்கொண்டால் பாவு ஓடவும் பாவு தோயவும் தோய்ந்தபின் நெய்யவும் யாதொரு கெடுதலுமில்லாமலும் இடைஇடையே அற்றுப்போகாமலும் முறுக்குகள் விழாமலும் இருக்கும். இந்த முறையைப் பரிட்சை செய்து பார்க்கும்படி கேட்டுக் கொள்கிறேன் என்று ஒரு நிருபர் எழுதுகிறார்.

ஜீவஹிம்சை நிவாரணச் சங்கம்:— ஸ்ரீமான்கள் அய்யாக்கண்ணு கோவிந்தன் செங்கல்வராயன் ஆகியவர்கள் ஜூன் ௨௭௳ மைலாப்பூர் மைதானத்தில் இரண்டு பன்றிகளை அனாவசியமான கொடூரமுறையில் கொன்றதாகச் சங்கத்தினர் குற்றஞ்சாட்டினர். அந்தப் பிராணிகளின் வாயும் கால்களும் கயிற்றினால் கட்டப்பட்டிருந்ததாகவும் கூர்மையான கத்தியைக்கொண்டு சரியான முறையில் கொல்லாமல் தாறுமாறாக அந்தப் பிராணிகளைச் சித்திரவதை செய்ததாகவும் சொல்லப்பட்டது. சென்னை மிருகவைத்தியசாலையைச் சேர்ந்த மிஸ்டர் ஜீ. டி. சில்வா இந்த வழக்கில் சாக்ஷியம் கொடுத்தார் ராயப்பேட்டை பெஞ்சுக் கோர்ட்டில் எதிரிகள் குற்றஞ் செய்தவர்களென்று தீர்மானிக்கப்பட்டு அபராதம் விதிக்கப்பட்டனரென்று சங்கக்காரியதரிசி அறிவிக்கிறார்.

கண்டனூர்:—இவ்வூரில் நடைபெற்ற சிவன்கோவில் உற்சவத்தில் இவ்வூர் வித்தியாசாலை மாணவர்கள் தமிழ்வேத பாராயணஞ் செய்து வந்தனர். இளஞ் சிறுமக்கள்—செல்வக்குழந்தைகள்—கையில் தாளங்கொண்டு சிவவேடப் பொலிவுடன் அமுதமொழுகும் மழலை மொழியில் இனிய இசையுடன் பாடிக்கொண்டு வந்த தோற்றம் ஞானசம்பந்தப் பெருமான் பல வுடல் தாங்கி வருமா போன்றிருந்தது இதைக் கண்ணுற்ற சைவர்மனம் மகிழ்ச்சியுற்றிருக்கும். தமிழ்நாடு புனிதமடையப் போகின்றதென்பதற்கு இதொரு அறிகுறியாகும். ஏனைய பள்ளிக்கூட உபாத்தியாயர்களும் இம்முறையைப் பின்பற்றுவார்களாக.

காரைக்குடி தனவைசிய ஊழியன் அச்சியந்திரசாலையில் அச்சிடப்பெற்று சொ. முருகப்ப செட்டியாரால் பிரசுரஞ் செய்யப்பெற்றது.